கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி
முன்னிலை : திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி

2021 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வியாழக்கிழமை
ஐ.ஏ.எண்.**1/2021** இன் அ.வ.எண்.**349/2018**

A.S.செல்வகுமார் ... மனுதாரர் / வாதி

/எதிர்/

J.செல்வநாயகம் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 22.09.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பிரபு அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவசண்முகம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

**ஆணையுரை**

இம்மனுவானது ஆணையுறுதி ஆவணத்தில் கண்டுள்ள காரணங்களுக்காக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து, நில அளவையர் மூலம் மனுச் சொத்துக்களின் பௌதீக தன்மை மற்றும் அதன் நான்குபுற எல்லைகளை அளவீடு செய்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரர் மனுச்சங்கதியின் சுருக்கம் :</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் அசல் வழக்கை எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்திற்கு வடபுறம் 1-ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அமைந்துள்ளது. மேலும், 1-ம் எதிர்மனுதாரர், 2,3 எதிர்மனுதாரர்களின் தாயார் ஆவார். மேலும், இந்த 2,3 எதிர்மனுதாரர்கள் உடன்பிறந்த சகோதர-சகோதரிகள் ஆவார்கள். மேலும், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு 'A' ஷெட்யூல் சொத்திற்கு கிழபுறம் 4-ம் எதிர்மனுதாரர்களின் குடியிருப்பு வீடு அமைந்துள்ளது. மேலும், மனு 'A' ஷெட்யூல் சொத்துக்கள் ஆதியில் செல்லப்பகவுண்டர் மகன் பழனிக்கவுண்டர் என்பவருக்கு கடந்த 04.10.1933-ம் தேதிய கிரையசாசனப்படி பாத்தியப்பட்டது. மேற்படி சொத்துக்களில் மேற்படியாரின் மகன் வழி வாரிசுதாரர்கள் என்ற முறையில் இந்து வாரிசுரிமை சட்டப்படி கலைச்செல்வி, சிவக்குமார் ஆகியோர்கள் சேர்ந்து கூட்டாக அனுபவித்து வந்து, மேற்படி மனு 'A' ஷெட்யூல் சொத்துக்களைப் பொறுத்து, கடந்த 01.08.2018-ம் தேதி மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். அது பொள்ளாச்சி தாலூக்கா, ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3818/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மனு 'B' ஷெட்யூல் சொத்துக்களை கருப்பையாகாந்தி என்பவர் அவரது தனிப்பட்ட அனுபவ சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்து, மேற்படி மனு 'B' ஷெட்யூல் சொத்துக்களைப் பொறுத்து, கடந்த 01.08.2018-ம் தேதி மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். அது பொள்ளாச்சி தாலூக்கா, ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண

எண்.3819/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரைய சாசனப்படி மனுச்சொத்துக்கள் முழுவதும் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது. மேலும், மனுச்சொத்துக்களை மனுதாரர் தனிப்பட்ட அமைதியான அனுபவத்தில் வைத்து கிரைய தேதியிலிருந்து நாளது தேதிவரை அனுபவித்து வருகிறார். மேலும், கடந்த 07.10.2018-ம் தேதி இந்த எதிர்மனுதாரர்களும், அவர்களது ஆட்கள், வகையறாக்களும் சேர்ந்து மனுதாரரின் தனிப்பட்ட அமைதியான சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வரும் மனு சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள். அதை மனுதாரர் மிகவும் சிரமப்பட்டு அருகிலிருந்தவர்கள் துணையுடன் தடுத்து நிறுத்திவிட்டார். மேலும், மனுதாரர் மனுச்சொத்துக்களைப் பொறுத்து 1-ம் எதிர்மனுதாரரின் பேரில் இந்நீதிமன்றத்தில் கடந்த 08.10.2018-ம் தேதியில் C.P.No.175/2018 நெம்பரில் Caveate மனு தாக்கல் செய்ததை தெரிந்து கொண்ட எதிர்மனுதாரர்கள், அவர்களது ஆட்கள் வகையறாக்களுடன் மீண்டும், கடந்த 10.10.2018-ம் தேதி மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட மனுச்சொத்துக்களில் சட்டவிரோதமாக நுழைந்து மனுதாரரிடம் வீண் தகராறு செய்து மனுச்சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தார்கள். அதை மனுதாரர் அன்றைய தினமே (10.10.2018) பொள்ளாச்சி தாலுக்கா, கோட்டூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அவ்வப்போது, மேற்படி காவல்நிலையத்தில் இது உரிமையியல் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்பதால் தகுந்த நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும் என்று போலீசாரால் அறிவுறுத்தப்பட்டது. மேலும், நீதிமன்ற ஆணையர் மூலம் மனுச்சொத்துக்களை அளவீடு செய்தால் தான் அதன் உண்மை நிலவரம் தெரியும் என்பதாலும், நீதிமன்ற ஆணையரை நியமிக்காவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம்

ஏற்பட்டுவிடும். எனவே, மனுச்சொத்துக்களின் பௌதீக தன்மை மற்றும் அதன் நான்குபுற எல்லைகளை நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து மனுச்சொத்தை அளவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)<u>எதிர்மனுதாரர் எதிருரை சங்கதியின் சுருக்கம்</u>** :

மனுதாரரது மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனு சொத்தானது ஆதியில், 04.10.1933 கிரைய பத்திரப்படி பழனிக்கவுண்டருக்கு சொந்தமானதாகும். பழனிச்சாமி கவுண்டர் காலமான பின்பு அவரது மகன் சின்னசாமி கவுண்டர் அனுபவித்து வந்தார். சின்னசாமி கவுண்டர் காலமான பின்வு அவருடைய மனைவி பழனியம்மாள் அனுபவித்து வந்தார். அதன் பிறகு அவர்களது வாரிசுகளான கலைசெல்வி, சிவக்குமார் இருவரும் அனுபவித்து வந்த சொத்துக்களை 01.08.2018 தேதியில் மனுதாரருக்கு தாவா ஏ ஷெட்யூல் சொத்துக்களை கிரையம் செய்துகொடுத்துள்ளனர். மேலும், 13.7.2012-ல் கருப்பையாகாந்திக்கு பாகசாசன வகையில் பாத்தியப்பட்டு 01.08.2018 தேதியில் மனுதாரருக்கு தாவா பி ஷெட்யூல் சொத்துக்களை கிரையம் செய்துகொடுத்துள்ளார். மேற்படி மனுச்சொத்துக்களில் மனுதாரர் தங்களுக்கு உரிமையுள்ளதாகவும் அதனால் சுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என்ற பரிகாரத்துடன் மனு தாக்கல் செய்யப்பட்டு தற்போது இந்த இடைநிலை மனுவில் நீதிமன்ற ஆணையாளரை நியமித்து மனுச்சொத்தின் நான்குபுற எல்லைகளை அளந்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு மனு தாக்கல் செய்துள்ளார். மனுச்சொத்தில் ஒரு பகுதி எதிர்மனுதாரருக்கும், மற்றொரு பகுதி நான்காவது

எதிர்மனுதாரருக்கம் பாத்தியப்பட்டது. மேற்படி பகுதிகளை சேர்ந்து மனுதாரர் உள்நோக்கத்துடன் கிரையம் பெற்றுள்ளார். மனுதாரர் கிரையம் பெற்றுள்ள மனுச்சொத்திற்கு வழித்தடம் இல்லையென்றும், மேற்படி சொத்துக்களுக்கு வழித்தடத்தை சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்தும் பொருட்டு எதிர்மனுதாரர்களின் சொத்தை சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்ய போலியாக கிரையப்பத்திரம் எழுதியுள்ளார். மொத்த மனுச்சொத்திற்கும் மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த நபர்கள் உரிமையாளர்கள் அல்ல என்றும், உள்நோக்கத்துடன் கிரையம் எழுதிக்கொடுத்த நபர்களும், மனுதாரரும் கூட்டுச்சேர்ந்து எதிர்மனுதாரர்ககளின் சொத்துக்களை சட்டத்திற்கு புறம்பாக கைப்பற்றும் நோக்கத்துடன் கிரையத்தை ஏற்படுத்தி தாவாவும், மனுவும் தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, மேற்படி தாவா சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்ற நிலையில் ஆணையாளர் நியமித்து அறிக்கை தாக்கல் செய்வது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. 1-ம் எதிர்மனுதாரருக்கு 29.06.1988 தேதியிட்டு பொள்ளாச்சி, ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் 816/1988 கிரையப்பத்திரப்படி பாத்தியப்பட்ட சொத்துக்களில் ஒரு பகுதி சொத்தில் மனுதாரரும், அவருக்கு கிரையம் எழுதி கொடுத்தவர்களும் கூட்டுச்சேர்ந்து கிரையம் எழுதிக் கொண்டுள்ளார்கள். மேற்படி, 816/1988 கிரையப்பத்திரத்தில் இரண்டாவது அயிட்டமாக 1-ம் எதிர்மனுதாரருக்கு க.ச.157/C1-ல் 1 1/2 செண்ட் காலியிடம் பாத்தியப்பட்டு 1-எதிர்மனுதாரர் சுவாதீனத்தில் இருந்து வந்தது என்றும், மேற்படி ஒன்றரை செண்ட் காலியிடத்தில் மேல்புறம் தென்வடலாக கிழமேல் ரோட்டிலிருந்து மனுதாரர் அவருடைய கிரையச்சொத்திற்கு செல்வதற்காக ஆக்கிரமிப்பு செய்து போலியாக ஆவணம் தயாரித்துள்ளார். மேலும், 4-ம் எதிர்மனுதாரருக்கு உடுமலைப்பேட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.19/1951-ன்

படி உரிமை ஏற்பட்டுள்ள சொத்தில் ஒரு பகுதியையும் மனுதாரர் ஏமாற்றி கிரையம் பெற்றுள்ளார். மேற்படி வகையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதி 1988 வருடத்திலிருந்தும் மற்றோரு பகுதி 1951 வருடம் முதல் 1,4 எதிர்மனுதாரர்களின் சுவாதீனத்தில் இருந்து வந்துள்ளது. மனுவின் ஏ-ஷெட்டியூல் சொத்தை, மனுதாரருக்கு எழுதிக் கொடுத்தவர்கள் சொத்திற்கு தாங்கள் மட்டுமே உரிமையளார் என்பதற்கும், சுவாதீனம் நிரூபிக்கவும் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மனு பி-ஷெட்டியூல் சொத்துக்களை மனுதாரருக்கு விற்பனை செய்துள்ள கருப்பையாகாந்தியின் தகப்பனாருக்கு 701/1951-ன்படி பாத்தியப்பட்ட சொத்துக்களை தந்தையார் காலமானபிறகு கருப்பையாகாந்தியும், இதர வாரிசுகளும் தங்களுக்குள் 3104/2012-ன் பத்திரப்படி பாகம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். மேற்படி பாகபத்திரப்படி கருப்பையாகாந்திக்கு பிரிந்த சொத்துக்கள் கருப்பையாகாந்திக்கும், இவருடைய வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்டது என்றும், எனவே கருப்பைய்யாகாந்தி இவருடைய வாரிசுகளை சேர்த்து தான் கிரையம் எழுதி கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும். மேலும், வாரிசுகளின்றி கருப்பைய்யா காந்தி எழுதிக்கொடுத்துள்ள கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லதக்கதல்ல. மேற்படி மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்தவர்களுக்கு மனுமொத்த சொத்திற்கும் சுவாதீனம் இல்லாத நிலையில் மனு சொத்தின் சுவாதீனம் மனுதாரரிடம் இருப்பதாக மனுவில் கூறியுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. 1-ம் எதிர்மனுதாரர் தன்னுடைய சொத்தை அளந்து கொடுக்குமாறு மேற்படிசொத்தில் முந்தைய உரிமையாளர்கள் பெயரை நீக்கம் செய்யக்கோரியும், அவருடைய பெயரை சேர்க்க கோரியும் 30.12.2016 தேதியிலிருந்து வருவாய்துறைக்கு மனு தாக்கல் செய்து வந்துள்ளார். மேற்படி பரிகாரம் கோரி ஒப்புதல் பெற இயலாமல் தன்னுடைய வயதான

காலத்தில் 70 வயதிலும் பத்துக்கு மேற்பட்ட முறை மனுக்கள் தாக்கல் செய்தும், வருவாய் துறையினர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், 1-ம் எதிர்மனுதாரர் சார்பாக மலரவன் என்பவர் 30.12.2016-ல் மனு தாக்கல் செய்து வட்டாட்சியர் 12.01.2017-ல் மனு ஏற்றுக்கொண்டு நாளது தேதி வரை எந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மனுச்சொத்து அமைந்துள்ள அங்கலகுறிச்சிகிராமம், புல எண் 157/1C (S.F.No.382/12)-ல் நத்தம் புறம்போக்கு காலியிடம் மேற்படி நத்தம் புறம்போக்கு காலியிடத்தை குறித்து பத்திர பதிவுத்துறை பதிவுக்காக எந்த பத்திரத்தையும் பதிவுக்கு ஏற்று உரிமை மாற்றம் செய்யக்கூடாது. ஆனால் மனுதாரர் சார் பதிவாளர் அலுவலகம் உள்பட அனைத்து அரசு அலுவலகங்களையும் அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி சட்டத்திற்கு புறம்பான வேலைகளை செய்துள்ளார். மனுதாரர் சொத்தை சட்டத்திற்கு புறம்பாக கைப்பற்ற வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் எதிர்மனுதாரர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ததோடல்லாமல் வேலி அமைக்க மனுதாரர் முயற்சி செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள், மனுதாரரின் சுவாதீனத்தை இடையூறு செய்தார்கள் என்றும், காவல் துறையில் புகார் கொடுத்தார்கள் என்ற சங்கதிகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை. சொத்திற்கு உரிமையில்லாத நபர்களிடம் போலியான கிரையப் பத்திரங்களை ஏற்படுத்தி போலி பத்திரங்களின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து ஆணையாளர் நியமனம் மனுக்களை தாக்கல் செய்து மனுதாரர் மறைமுகமாக சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறார். மனுச் சொத்தின் உரிமை, மனுதாரர் பெயரில் உள்ள கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. இந்நிலையில், மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் ஆணையாளரை நியமித்து மனுச்சொத்தின் விவரங்களை அறிக்கை தாக்கல் செய்வது மனுதாரருக்கு

சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திவிடும் என்பதை இம்மாண்புமிகு நீதிமன்றம் கருத்தில் கொண்டு மேற்படி மனு தள்ளுபடி செய்யவேண்டுபட வேண்டும்.

**4)** இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பிலும் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**6)** **<u>பிரச்சினை :</u>**

மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், மனுசொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து, நில அளவையர் மூலம் அளவீடு செய்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரருக்கு மனுச்சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்தவர்களுக்கு மனு மொத்த சொத்திற்கும் சுவாதீனம் இல்லை என்றும், சொத்திற்கு உரிமையில்லாத நபர்களிடம் இருந்து மனுதாரர் போலியான கிரைய பத்திரத்தை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர் குறிப்பிடுவது போல போலி கிரைய பத்திரங்களை ஏற்படுத்தி மனுதாரர் வழக்கு தாக்கல் செய்திருந்தால் அதுகுறித்து எதிர்மனுதாரர் தனியாக வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றும், அவ்வாறு நாளது தேதி வரை மனுதாரருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் அவரது மனுவில் மனுச்சொத்துக்களை நீதிமன்றத்தின் மூலம் ஆணையாளர் ஒருவரை நியமித்து ஆவணங்களின் படி தகுந்த நில அளவையர் மூலம் அளவீடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். ஆனால், எந்த ஆவணங்களின் படி மனு சொத்துக்கள் அளக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடவில்லை. மேலும், மனுதாரர் உள்நோக்கத்துடன் கிரையம் பெற்றுள்ளார் என்றும், போலியாக கிரைய பத்திரம் எழுதியுள்ளார் என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனவே, மனுதாரருக்கு தாவா சொத்தில் உள்ள உரிமை எதிர்மனுதாரால் மறுக்கப்பட்டுள்ளது. மேலும், தாவா சொத்தின் சுவாதீனத்தில் மனுதாரர் உள்ளதற்கு எந்தவொரு வருவாய்துறை ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மனுதாரருக்கு தாவா சொத்தில் எந்த ஆவணங்களின் அடிப்படையில் உரிமை ஏற்பட்டதோ அந்த ஆவணமே போலியானது என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணங்கள் உண்மையானதா செல்லதக்கதா என்பதை இந்நிலையில் முடிவு செய்ய இயலாது. இருப்பினும் மனுதாரருக்கு தாவா சொத்தில் எந்த ஆவணத்தின் மூலம் உரிமை ஏற்பட்டதோ அந்த ஆவணத்தையே எதிர்மனுதரார் மறுக்கும் போது அதன் அடிப்படையில் மனுச்சொத்துக்களை அளவீடு செய்ய வேண்டும் என்று மனுதாரர் கோருவது ஏற்புடையதாக இல்லை. மேலும், மனுதாரர் மனுசொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் எந்த ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டது என்பதையும், தெரிவிக்கவில்லை. அவ்வாறு, எந்த ஆவணத்தின் அடிப்படையில் அளவீடு செய்ய வேண்டுமென்று குறிப்பிடாத காரணத்தாலும், தாவா சொத்தில் மனுதாரருக்கு உள்ள உரிமையை எதிர்மனுதாரர் மறுப்பதாலும் இம்மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்தால் அது ஒரு தரப்பினருக்கு மட்டும் ஆதரவாக

சாட்சியங்களை சேகரிக்கும் விதமாக அமைந்து விடும். அவ்வாறு சாட்சியங்களை சேகரிப்பதற்காக நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதி அவ்வாறே இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**7)** முடிவில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்ததை, என்னால் பிழை நீக்கம் செய்து 2021ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/- P. சுபாஷினி**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு**
**சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :**

... இல்லை ...

**(ஒப்பம்)/- P. சுபாஷினி**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.